# FORM-3
# MINUTES OF THE COUNCIL MEETINGS
# குழித்துறை நகராட்சி

**குழித்துறை நகர் மன்றத்தின் 08–12–2017 ம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற சாதாரணரக் கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருள் மற்றும் தீர்மானம்**

குழித்துறை நகராட்சியின் பொதுசுகாதாரப்பிரிவில் திடக்கழிவு மேலாண்மை திட்டத்தில் பணிபுரிய போதிய பணியாளர்கள் இல்லாததால் குப்பைகளை முதல்நிலை சேகரித்தல், இரண்டாம் நிலை சேகரித்தல், மக்கும் மற்றும் மக்காத குப்பைகளை பிரித்தெடுத்தல், குப்பைகளை மக்கச் செய்தல் மக்காத குப்பைகளை பிரித்தெடுத்தல், மக்காத குப்பையினை மறுசுழற்சி செய்தல் பணிகளை திறம்பட செயல்படுத்துவதில் பாதிப்பு ஏற்படும் சூழ்நிலை உருவாகும். ஆகவே திடக்கழிவு மேலாண்மை திட்டத்திற்கு ஒப்பந்த அடிப்படையில் 64 துப்புரவு பணியாளர்களை பெறுவதற்கு நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் அனுமதி பெற்று பணிகள் செய்ய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

அ.கு.:– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3007**

**அனுமதிக்கப்பட்டது.**

## குழித்துறை நகர் மன்றத்தின் 15–12–2017 ம் தேதி வெள்ளிக்கிழமை நடைபெற்ற அவசரக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட பொருட்கள் மற்றும் தீர்மானங்கள்

பொருள் எண். 1

இந்நகராட்சியில் உள்ள 21 வார்டுகளில் வார்டு மறு நிர்ணயம் செய்ய வரப்பெற்ற தமிழ்நாடு மாநில அரசிதழ் வெளியீடு எண்.288, நாள் 12–09–2017 மற்றும் உறுப்பினர் செயலர், தமிழ்நாடு மாநில மறுசீரமைப்பு ஆணையம், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.3174/2017/இஜி1, நாள் 19–10–2017–ன்படி தயார் செய்யப்பட்டுள்ள வார்டு மறு சீரமைப்பிற்கான பிரேரணை மன்றத்தின் அங்கீகாரத்திற்காக.

**நகர் மன்றத்தீர்மான எண். 3008**
**அங்கீகரிக்கப்பட்டது.**

பொருள் எண். 2

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான கலவை உரக்கிடங்கில் ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள Windrows Plat form–ல் உரம் தயாரிக்கும் கூடம் (Vermi Compost) அமைக்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் 6–12–2017–ம் நாளய நேராய்வில் அறிவுறுத்தப்பட்டது. அதன்படி மேற்படி உரம் தயாரிக்கும் கூடம் அமைப்பதற்கு ரூ.35.00 லட்சத்திற்கான மதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது. மேற்படி பணியினை நகராட்சி வருவாய்நிதியின் கீழ் செய்வதற்கு மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.:– மன்றம் அனுமதிக்கலாம்.

**நகர் மன்றத்தீர்மான எண். 3009**
**அனுமதிக்கப்பட்டது.**

பொருள் எண். 3

குழித்துறை நகராட்சியில் கீழ்கண்ட திட்டப்பணி செய்வதற்கு 24–11–2017–ம் தேதியன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகள் மன்றத்தின் பார்வைக்கும் ஒப்புதலுக்கும்.

| வ. எண் | வேலையின் பெயர் | மதிப்பீடு ரூபாய் லட்சத்தில் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்த விகிதம் |
|---|---|---|---|---|
| 1 | குழித்துறை நகராட்சிக்குட்பட்ட வி.எல்.சி. மைதானம் அருகில் தாமிரபரணி ஆறு பக்கம் வாம்பே திட்டத்தின்கீழ் கட்டி முடிக்கப்பட்ட கழிப்பறையின் Closet மற்றும் தண்ணீர் குழாய் மாற்றி பராமரிப்பு மற்றும் வி.எல்.சி. மண்டபத்தின் கதவு பழுது சரிபார்த்தல் | 1.38 லட்சம் (ஒரு லட்சத்து முப்பத் தெட்டாயிரம்) | 1) திரு.S பாபு<br>2) திரு.A. ஆன்றணி | 0.40 % குறைவு<br>2.57% அதிகம் |

அ.கு. :– அ) வரப்பெற்ற ஒப்பந்தப்புள்ளிகளில் திரு.எஸ். பாபு என்பவரது ஒப்பந்தப்புள்ளி குறைவாக உள்ளதை மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) அவசர அவசியம் கருதி தனி அலுவலர் முன் அனுமதி பெற்று வேலை உத்தரவு வழங்கியதையும் மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர் மன்றத்தீர்மான எண். 3010</u>**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 4</u>

குழித்துறை நகராட்சியில் 2007–2008–ம் ஆண்டில் திரு.D. பிரேம்குமார் என்பவரால் செய்து முடிக்கப்பட்ட பணிகளுக்கு பட்டியலில் பிடித்தம் செய்யப்பட்ட வைப்புத் தொகைகள் ரூ.78,730/–ஐ அன்னாருக்கு திருப்பி வழங்கிட மன்றம் தீர்மானிக்கப்பட்டது.

**<u>நகர் மன்றத்தீர்மான எண். 3011,</u>**
**<u>அனுமதிக்கப்பட்டது.</u>**

<u>பொருள் எண். 5</u>

குழித்துறை நகர்மன்றம் தனது தீர்மானம் எண்.3006, நாள் 27–11–2017–ன்படி குத்தகை நிபந்தனைகள் 2018–2019 முதல் 2020–2021 முடிய மூன்றாண்டு முடியவுள்ள காலத்திற்கு குத்தகை உரிமம் நிபந்தனைகள் பொது நிபந்தனைகள் மற்றும் சிறப்பு நிபந்தனைகள் அரசு நாளிதழ்களில் பிரசுரம் செய்ய வேண்டியதுள்ளதால் பக்கம் ஒன்றுக்கு ரூ.2100/– வீதம் 35 பக்கத்திற்கு உத்தேச செலவினம் ரூ.75,000/–ம் செலவிட மன்றம் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர் மன்றத்தீர்மான எண். 3012</u>**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 6</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான பி.பி.முனிசாமி வணிகவளாக கடை எண்.F8, F9, F10, F11 மற்றும் F12 ஆகிய 5 கடைகளுக்கு 2008–2009–ல் ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு உரிய முறையில் கடையினை குத்தகைக்கு எடுக்கப்பட்டது. தற்போது குத்தகை அரசாணை எண்.92, நாள் 3–7–2007–ன்படி அரசின் மறு மதிப்பீடு தொகைக்கு குத்தகைதாரர் ஒப்புக்கொள்ளாததால் கடையினை 31–08–2017–ல் ஆகஸ்ட் மாதம் வரையுள்ள வாடகையினை செலுத்தி விட்டு கடையின் சாவியினை ஒப்படைக்கப்பட்டது. மேற்படி கடைகளுக்கு அன்னார் செலுத்திய வைப்புத் தொகையினை ஒவ்வொரு கடைக்கும் ரூ.1,00,000/–ம் வீதம் செலுத்தியுள்ளதை திருப்பி கேட்டுள்ளார். மேற்படி வைப்புத் தொகை 2008–2009–ம் ஆண்டு வைப்புத் தொகை பதிவேட்டில் பக்கம் 29–ல் பதிவாகியுள்ளது. ஆகவே மேற்படி 5 கடைகளுக்கான

வைப்புத் தொகை ரூ.5,00,000/–த்தில் மின்கட்டணம் ஒவ்வொரு கடைக்கும் ரூ.5,000/– கழித்துவிட்டு மீதிதொகை ரூ.4,75,000/– திருப்பி வழங்கலாம்.

அ.கு.:– மன்றம் அனுமதிக்கலாம்.

<u>**நகர் மன்றத்தீர்மான எண். 3013**</u>

**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 7</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலைய இருசக்கர வாகன காப்பகம் 28–02–2014–ல் உரிய ஏலம்/ ஒப்பந்தப்புள்ளியில் கலந்து கொண்டு நகர்மன்றத் தலைவரின் முன் அனுமதியின் 3–3–2014–ன்படி குத்தகை உரிமம் வருட தொகை ரூ.41,400/–க்கு ஒப்புக் கொள்ளப்பட்டது. மேற்படி உரிமம் 2014–2015 மற்றும் 2015–2016 வரையும் குத்தகை உரிமத்தொகை மற்றும் அனைத்து வரிகளும் செலுத்திய பின்பு 2016–017–ம் வருடத்திற்கு குத்தகை உரிமம் வேண்டாம் எனவும் அன்னார் செலுத்திய வைப்புத் தொகை ரூ.1,00,000/–த்தை திருப்பி கேட்டுள்ளார்.

அதன்படி நகர்மன்றத் தீர்மானம் எண்.2428, நாள் 14–01–2016–ன்படி உரிமம் ரத்து செய்யப்பட்டது. அதில் அனைத்து நிதியிழப்பிற்கும் அன்னாரை பொறுப்பாக்கி அன்னாரின் வைப்புத்தொகையிலிருந்து ஈடு செய்த பின்பு மறு ஏலம் கோரலாம் எனவும் அதன்படி உரிமகாலம் 3 வருடம் முடிந்து விட்டதாலும் அன்னாரின் வைப்புத் தொகையினை ரூ.1,00,000/–த்தில்

| | | |
|---|---|---|
| 2016–2017–ம் ஆண்டுக்கு குத்தகை உரிமம் | – ரூ. | 45,645 |
| 2016–2017 சேவை வரி | – ரூ. | 8,215 |
| 2016–2017 வருமானவரி | – ரூ. | 912 |
| மின்கட்ட ணவைப்புத் தொகை | – ரூ. | 5,000 |
| விளம்பர செலவு | – ரூ. | 5,000 |
| மொத்தம் | ரூ. | 64,772 |

ரூ.1,00,000 – 64,772 = 35,228/–ஐ திருப்பி வழங்க மன்றம் அனுமதி வழங்கலாம்.

<u>**நகர் மன்றத்தீர்மான எண். 3014**</u>

**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 8</u>

14–வது நிதிக்குழு மான்யத்தின்கீழ் 2017–2018–ம் ஆண்டில் மேற்கொள்ளப்பட உள்ள திட்டப்பணிகளுக்கான ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு (15–12–2017–ம் நாளது) தினமலர் நாளிதழில் விளம்பரம் செய்த வகைக்கு விளம்பரப்பட்டியல் ரூ.13356/–க்கு வரப்பெற்றுள்ளது. (பட்டியல் எண்.NG5933, dated 25-11-2017 ) மேற்படி விளம்பரக் கட்டணம் ரூ.13,356/– சம்பந்தப்பட்ட பத்திரிகைக்கு வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர் மன்றத்தீர்மான எண். 3015</u>**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 9</u>

குழித்துறை நகர புல எண்.D9/74-ல் சாலை புறம்போக்கு ஆக்கிரமிப்பு அகற்ற திருமதி. றீட்டா என்பவர் தொடர்ந்த வழக்கு WP(MD) No.12821/2017–ன் தீர்ப்பின்படி, ஆக்கிரமிப்பாளர்களக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டது. அறிவிப்பினை எதிர்த்து வழக்கு அறிவிப்பு வரப்பட்டது. எனவே திரு. குமரன் நாயர் வழக்கறிஞரிடமிருந்து வரப்பட்ட 10 வழக்கறிவிப்பிற்கும் பதில் அறிவிப்பு திரு. வாமணன் வழக்கறிஞர் மூலம் அனுப்பப்பட்டது. எனவே பதில் அனுப்பிய வகைக்கு ரூ.2000/– வீதம் பத்து அறிவிப்பிற்கும் ரூ.20000/– கோரியுள்ளார். எனவே வழக்கறிஞர் கோரிய தொகை ரூ.20,000/–ம் நகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு.
அ.கு.:– வழக்கறிவிப்பிற்கு பதில் வழங்கிய வகைக்குரிய தொகை ரூ.20,000/–ம் வழங்கலாம்.
F.1841/2017/TPI.

**<u>நகர் மன்றத்தீர்மான எண். 3016</u>**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 10</u>

குழித்துறை நகராட்சிக்குட்பட்ட 21 வார்டுகளுக்கான, சொத்துவரி கேட்பு, நிலுவை, Demand Register, தொழில்வரி கேட்பு, நிலுவை, Demand Register, குடிநீர் கட்டண கேட்பு, நிலுவை, Demand Register பைண்டிங் செய்த வகைக்கு ரூ.900/–க்கான செலவின தொகையில் வரப்பெற்றுள்ளது. அத்தொகையினை நகராட்சி பொது நிதியிலிருந்து G.J. Jenitta Book Binding works, Kannacode, Marthandam என்ற நிறுவனத்திற்கு வழங்க மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு. :– மன்றம் அனுமதிக்கலாம்.

**<u>நகர் மன்றத்தீர்மான எண். 3017</u>**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 11</u>

குழித்துறை நகராட்சியில் பணிபுரியும் இளநிலை உதவியாளர் திருமதி.எம். பிரபா தனக்கு இருசக்கர வாகனம் வாங்க முன்பணம் கோரி மனு அளித்துள்ளார். எனவே அன்னாருக்கு இருசக்கர வாகனம் வாங்கிட ரூ.50,000/– முன்பணமாக வழங்கிடவும் மாதம் ரூ.1700/– வீதம் 30

தவணைகளாக அன்னாரது மாதச்சம்பளம் ஜனவரி 2018 முதல் பிடித்தம் செய்திடவும் அசல் முடிந்த உடன் உரிய வட்டி கணக்கீட்டு வசூலித்திடவும் உரிய மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.
அ.கு. :– மன்றம் ரூ.50,000/– வழங்கிட அனுமதிக்கலாம்.

**<u>நகர் மன்றத்தீர்மான எண். 3018</u>**
**அனுமதிக்கப்பட்டது.**

<u>பொருள் எண். 12</u>

குழித்துறை நகராட்சிக்கு சொந்தமான மார்த்தாண்டம் பேருந்து நிலையத்தில் காலியாக உள்ள கடைகளை 27–9–2017–ல் செய்தி மக்கள் துறைமூலம் பத்திரிகையில் விளம்பரம் செய்த வகைக்கு தினபூமி பத்திரிகையில் 14–09–2017–ல் விளம்பரம் செய்யப்பட்டமைக்கு விளம்பரக் கட்டணம் ரூ.17,766/–ஐ தினபூமி பத்திரிகைக்கு வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.
அ.கு. :– அனுமதிக்கலாம்.

**<u>நகர் மன்றத்தீர்மான எண். 3019</u>**
**அனுமதிக்கப்பட்டது.**

ஒப்பம்/–
ஆணையாளர் மற்றும்
தனி அலுவலர்,
குழித்துறை நகராட்சி.

/ உண்மை நகல் /

ஆணையாளர்,
குழித்துறை நகராட்சி.